இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 136 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 11 – வெள்ளிக்கிழமை 26 டிசம்பர் 2025 – கோவை ★★ 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 136: Thiruvalluvar Year - 2056 - Margazhi 11 - Friday 26 December 2025 - Kovai ★★ 12+12 Pages ₹ 5.00

### பகைவர் கூட்டத்தின் வஞ்சக எண்ணங்களை வீழ்த்திட

# தமிழ்நாடு ஓரணியில் நின்றால் வெற்றி நமதே!

## தந்தை பெரியார் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**நெல்லை, டிச. 26-**

**“பகைவர் கூட்டத்தின் வஞ்சக எண்ணங்களை வீழ்த்திட தமிழ்நாடு ஓரணியில் நின்றால் வெற்றி நமதே” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியாரின் நினைவு நாளையொட்டி தமது சமூக வலை தளத்தில் உறுதிபட பதிவிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**வளைந்து நின்ற முதுகுகள் தலை நிமிர்ந்து தன் மானம் காக்க, தன்னையே இந்த மண்ணுக்குத் தந்த தந்தை பெரியாருக்குப் புகழ் வணக்கம்!**

**தமிழர்கள் தலைகுனியாமல் ஆதிக்கத்துக்கு அடிபணியாமல் பகுத்தறிவுச் சிந்தனையோடு சக மனிதரை நேசித்துச் சமத்துவத்தைப் பேணுவதே, இன மானமே பெரிதென அவர் உழைத்த உழைப்புக்கு நாம் செலுத்தும் நன்றி!**

**பெரியார் எனும் பெருஞ் சூரியனைத் திருடவும் முடியாமல் தின்று செரிக்கவும் முடியாமல் திண்டாடும் பகைவர் கூட்டத்தின் வஞ்சக எண்ணங்களை வீழ்த்திட ஒற்றுமை உணர்வோடு ஓரணியில் தமிழ்நாடு நின்றால், என்றும் வெற்றி நமதே!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



### 100 நாள் வேலைத் திட்டம் ஒழிப்பு; ஒன்றிய பா.ஜ.க. அரசு – துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து

# தமிழகமெங்கும் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சித் தலைவர்கள் – விவசாயக் கூலித் தொழிலாளர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் பங்கேற்பு!

**சென்னை, டிச. 26-**

**100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் அ.தி.மு.கவைக் கண்டித்தும், 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், தமிழ்நாடு முழுவதும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப் பணிகளை சீர்குலைத்ததோடு, திட்டத்தின் பெயரில் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும், சென்னை மற்றும் அனைத்து ஒன்றியங்களிலும், மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை மேடவாக்கத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் மூத்தத் தலைவர் கே.வி. தங்கபாலு, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் காதர் மொய்தீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சித் தலைவர் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், மக்கள் நீதி மய்யம் பொதுச்செயலாளர் அருணாச்சலம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி பொன்.குமார், தமிழ் மாநில தேசிய லீக் திருப்பூர் அல்தாப் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

### தமிழ்நாட்டில் ஒலிக்கும் குரல்

## ஒட்டுமொத்த இந்திய விவசாயிகளுக்கான குரல்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, டிச. 26-**

**“தமிழ்நாடு முழுவதும் 389 இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் குரல் தமிழ்நாட்டின் குரல் மட்டுமல்ல; ஒட்டுமொத்த விவசாயிகளுக்கான குரல்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.**

*#MGNREGAவை மீட்டெடுக்கவும், தங்களது வாழ்வாதாரத்தைக் காத்துக் கொள்ளவும் தமிழ்நாடு முழுவதும் 389 இடங்களில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்த ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள்!*

*இது தமிழ்நாட்டில் இருந்து ஒலிக்கும் ஒட்டுமொத்த இந்திய விவசாயிகளுக்கான குரல் என்பதை, அண்ணல் காந்தியின் மீது வெறுப்புணர்வோடு செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்கள் உணர வேண்டும்! ஏழைகளின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய வேண்டும்!*





மகாத்மா காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து நேற்று முன்தினம் (டிச.24 – புதன்கிழமை) சென்னை மேடவாக்கத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கி.வீரமணி (தி.க.), கே.வி.தங்கபாலு (காங்கிரஸ் ), வைகோ (மதிமுக), கே.பாலகிருஷ்ணன் (சிபிஐஎம்), மு.வீரபாண்டியன் (சிபிஐ), தொல்.திருமாவளவன் (விசிக), காதர் மொகைதீன் (ஐயுஎம்எல்), தி.வேல்முருகன் (துவாக), ஈ.ஆர்.ஈஸ்வரன் (கொமதேக), அருணாச்சலம் (மநீம), பொன்.குமார் (து.வி.தொ.க.) உள்ளிட்ட கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கனிமொழி என்.வி.என்.சோமு, துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, பிரபாகரராஜா, காரம்பாக்கம் கணபதி, அரவிந்த் ரமேஷ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

### திருஹரிகோட்டாவில்

## அமெரிக்க செயற்கைக்கோள்: வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது!

*சென்னை, டிச. 26 -*

முன் எப்போதும் இல்லாத அதிக எடை கொண்ட அமெரிக்க செயற்கைக்கோள் புளூபேர்ட் பிளாக்2 செயற்கை கோளை இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ திருஹரி கோட்டாவிலிருந்து நேற்று முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.



அமெரிக்காவின் ஏஎஸ்டி ஸ்பேஸ்மொபைல் நிறுவனத்தின் புளூபேர்ட் பிளாக் 2 தகவல் தொடர்பு செயற்கைக் கோள், மொபைல் ஸ்மார்ட் போன்களுக்கு நேரடியாக விண்வெளி அடிப்படையிலான செல்லுலார் பிராட் பேண்ட் இணைப்பை வழங்கும் நோக்கில் உருவாக்கப் பட்டது. இது, எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் 4ஜி மற்றும் 5ஜி சேவைகளை தரமான முறையில் வழங்குவதற்கானது.

இந்த செயற்கைக்கோள் நேற்று முன்தினம் காலை 8.55 மணிக்கு, ஆந்திரப் பிரதேசத்தின் திரு ஹரிகோட்டாவில் உள்ள சத்தீஷ் தவான் விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து LVM3 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. 15 நிமிடங்களுக்குப் பிறகு செயற்கைக்கோள் திட்டமிடப்பட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

---

## போலி மருந்துகள்: புகார் தெரிவிக்க ‘கியூஆர்’ குறியீடு!

*சென்னை, டிச. 26-*

நாடு முழுவதும் மருந்துகளால் ஏற்பட்ட பக்க விளைவுகள் குறித்து புகார் தெரிவிக்கும் வகையில் புதிய செயலியை தமிழக மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம் உருவாக்கி உள்ளது. ‘கியூ ஆர்’ குறியீடு உருவாக்கப்பட்டு, அனைத்து மருந்தகங்களுக்கும் தமிழக மருந்துகட்டுப்பாட்டு இயக்கம் அனுப்பியுள்ளது.

இதற்கிடையே, நாடு முழுவதும் போலி மருந்துகள் மற்றும் தரமற்ற மருந்துகளால் பொதுமக்கள் பல்வேறு உடல் நல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வருவதாக புகார்களும் எழுகிறது. இது போன்ற மருந்துகள் குறித்து 104 என்ற எண்ணில் மட்டுமே பொதுமக்கள் புகார்களை தெரிவித்து வருகின்றனர்.

இனி, மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவுகள் மற்றும் பாதிப்பு குறித்து குறிப்பிட்ட ‘கியூ ஆர்’ குறியீடு வாயிலாக பொதுமக்கள் புகார் அளிக்கலாம்.

---

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 1.53 லட்சம் பேர் விண்ணப்பம்!

*சென்னை, டிச. 26-*

தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் பெயர் சேர்ப்பு, நீக்கம், திருத்தம் தொடர்பாக விண்ணப்பங்கள் பெறும் பணி நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில், பெயர் சேர்க்கக் கோரி 4 நாட்களில் ஒரு லட்சத்து 53 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியலை தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கடந்த 19ஆம் தேதி வெளியிட்டார். அதில், தமிழ்நாடு முழுவதும் 97 லட்சத்து 38 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டிருந்தனர்.

அதைத் தொடர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டோர் மற்றும் புதிதாக பெயர் சேர்க்க விரும்புவோர், பெயர் நீக்கம், முகவரி மாற்றம் போன்றவற்றிற்கும் விண்ணப்பிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

---

## புத்தாண்டு விடுமுறையால் விமான கட்டணம் உயர்வு!

*சென்னை, டிச. 26-*

கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காகவும், பள்ளி, கல்லூரிகளுக்கு தொடர் விடுமுறை காரணமாகவும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

இதனால் சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளது. அதேநேரம் தூத்துக்குடி, மதுரை, திருச்சி, சேலம், கோவை, திருவனந்தபுரம் செல்லும் விமானங்களில் டிக்கெட்கள் அனைத்தும் காலியாகிவிட்டதால், இணைப்பு விமானங்களில் சென்னையிலிருந்து பெங்களூரு சென்று, அங்கிருந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விமான டிக்கெட் கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

சென்னை - தூத்துக்குடி வழக்கமான கட்டணம் ரூ.4,100. பெங்களூரு வழியாக சுற்றிச் செல்வதால் ரூ.13,400. சென்னை - மதுரை வழக்கமான கட்டணம் ரூ.4,248. பெங்களூரு வழியாக சுற்றிச் செல்வதால் ரூ.13,160. சென்னை - திருச்சி வழக்கமான கட்டணம் ரூ.4,121. பெங்களூரு வழியாக செல்வதால் ரூ.13,842. சென்னை - சேலம் வழக்கமான கட்டணம் ரூ.3,093 பெங்களூரு வழியாக சென்றால் ரூ.8,688. சென்னை கோவை வழக்கமான கட்டணம் ரூ.4,147. தற்போது கட்டணம் ரூ.8,448. சென்னை திருவனந்தபுரம் வழக்கமான கட்டணம், ரூ.5,173 பெங்களூரு வழியாக சுற்றி போவதால் ரூ.17,331 ஆகும்.